திட்டத்திற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

74—

கால்நடை மருந்தகம்

***13208—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில், மூலனூர் ஒன்றியம், கன்னிவாடியில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

75—

கால்நடை மருந்தகக் கட்டடம்

***18979—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியம், கே.ஜீ. கண்டிகை கிராமத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2004 பிப்ரவரி 13]

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன். திருவள்ளூர் மாவட்டம், மப்பேடு கிராமத்தில் கடந்த *4-9-2003* ஆம் தேதியன்று நடைபெற்ற சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாமின்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்பேரில், அதில் நான் கலந்துகொண்டேன். அப்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இதுகுறித்து பரிந்துரைக்கப்பட்டது. அந்த விழாவிற்கு மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் வந்திருந்தார்கள். கே.ஜி. கண்டிகை கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்ட ஸ்வர்ண ஜெயந்தி என்ற பொன்விழா சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் எட்டு இலட்சம் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான வரைபடமும் மதிப்பீடும் துறையால் ஏற்கப்பட்டு, கட்டடப் பணிகளுக்கான டெண்டர் விடப்பட்டுள்ளது. கால்நடை மருந்தகத்திற்கான கட்டடப் பணிகள் விரைவிலே நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போதுள்ள மருந்தகக் கட்டடம், கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமானக் கட்டடத்தில் வாடகை இல்லாமல் நல்ல முறையில் இயங்கி வருகின்றது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2001-2002* ஆம் ஆண்டில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தொடங்கப்பட்ட கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியில், பாலாபுரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்குக் கட்டடம் கட்டிக்கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களின் ஓர் அங்கமான அரசு ஊழியர்

மீது மட்டுமல்ல, அனைத்து மக்களின்மீதும் கருணை உள்ளம் கொண்டவர்கள். அன்பிற்கும் தாயுள்ளத்திற்கும் எல்லையற்ற, எல்லை வரையறுக்கமுடியாத அம்மா அவர்கள், கால்நடைகள்மீது அளவற்ற அன்பும் மாறாத பாசமும் கொண்டவர்கள். அதை உறுதிப்படுத்தும் வகையில்தான் கடந்த ஆண்டு 72 கிளை நிலையங்கள் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த ஆணையிட்டார்கள். அதில் ஒன்றாக அரசு தலைமைக் கொறடா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பாலாபுரம் கால்நடைக்கிளை நிலையமும் மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டது. அரசின் நிதி நிலை குறித்து அவர்கள் அறிவார்கள். அவர்கள் தொகுதியில் கே.ஜீ. கண்டிகையில் மருந்தகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாலாபுரம், அண்ணன் கொறடா அவர்கள் பிறந்த ஊர் என்பதும் எனக்குத் தெரியும். பாலாபுரத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதல்வர்... *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எப்படித் தெரியும்? *(சிரிப்பு)* அவர் சொன்னதினாலே தெரியுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது தெரிந்து கொண்டேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அளித்துள்ள சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அவர்கள் சுமார் ஒன்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுப்பார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று நிச்சயமாக அங்கேயும் ஒரு மருந்தகக் கட்டடம் கட்டிக்கொடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் கேள்விக்கு கொறடா பதில் சொல்வார்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் ஆதிதிராவிடர்களுக்கு தனி நபர் பயனீட்டாளர்கள் பயன்பெறும் வகையிலே கால்நடைகள் வளர்க்க கடன் வசதி பெற மானியம் வழங்கப்பட்டு வந்தது. இது தொடர்ந்து வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேள்விக்குப் பதில் இல்லையே?

2004 பிப்ரவரி 13]

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து வருகிற ஆண்டிலே அதற்குண்டான மதிப்பீட்டுத் தொகையினைக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு கொறடா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மலர்ந்தவுடன் ஒன்றியத்திற்கு 15 பயனாளிகளுக்கும் புறக்கடை கோழி வளர்ப்புக்காக மானியக் கடன் வழங்கப்பட்டது. அதைப்போல ஒன்றியத்திற்கு 5 பயனாளிகளுக்கு எருமைக் கிடேரி கன்றுகளுக்கும் கடன் உதவி வழங்கப்பட்டது. இதில் ஆடுகளுக்கான கடனுதவியும் அடங்கும். நிதி நெருக்கடி காரணமாக, அவ்வாறு தொடர்ந்து வழங்க இயலாத காரணத்தால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த நாளையொட்டி புறக்கடை கோழிவளர்ப்புக்கு முழு மானிய உதவிகள் வழங்கப்பட்டன. அரசின் நிதி நெருக்கடி சீரானதும் வருகின்ற மானியக் கோரிக்கையின்போது பல்வேறு திட்டங்கள் கொண்டுவரப்படுவதுடன், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களின் கோரிக்கையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான கவனத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

76—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சமூகக் காடுகள்

***38836—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, எதுமலை ஊராட்சி, காமாட்சிபுரம் கிராமத்தை நடப்பாண்டில், சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?